FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301675 (6/AC/2026

1. District : மாவட்டம் Salem | PS: காவல்நிலையம் V+AC | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் | Date: நாள் 24-10-2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018. | Sections பிரிவுகள்: 7, 12 r/w 7 and 13(2) r/w 13(1)(a)

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை Before 23.10.2026 at.

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 15.20 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-10-2026 | Time : நேரம் 16.00 Hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2026 Vol. IV | Time : நேரம் 16.00 Hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 3 Kms South West.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Salem City Municipal Corporation, Sooramangalam Zonal Office.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Chitra | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. Saravanan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Superintendent of Police, Vigilance Cell | (g) Address : முகவரி Collectorate Salem, Namakkal, Dharmapuri & Krishnagiri Districts

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Details enclosed in separate sheet.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted

Details enclosed in separate sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/10/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

24/10/2026.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.10.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 18.30 Hrs.

M. Nallammal.

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

Inspector of Police,
VAC, Salem.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.16/AC/2026 u/s 7, 12 r/w 7 and 13(2) r/w 13(1)(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.7-ன் தொடர்ச்சி...

1.	திரு.M.ஞானகுரு (வயது 44/2026) த/பெ.மாதையன், வரி வசூலர், கோட்டம்-8, அஸ்தம்பட்டி மண்டலம், சேலம் மாநகராட்சி.
2.	திரு.M.கோபாலகிருஷ்ணன் (வயது 38/2026) த/பெ.மாதையன், க.எண்.117/41, பாவேந்தர் தெரு, அரிசிபாளையம், சேலம்.
3.	திரு.K.வீரகுமார் (வயது 54/2026), த/பெ கந்தசாமி, வருவாய் ஆய்வாளர் (சிறப்பு), சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டல அலுவலகம், சேலம்.8
4.	திருமதி.R.சித்ரா (வயது 59/2026), க/பெ அசோகன், காசாளர், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டல அலுவலகம், சேலம்.
5.	திரு.ரா.வாசுதேவன் (வயது 55/2026), த/பெ.ராமசாமி, செயல்திறனற்ற பணியாளர் / வருவாய் உதவியாளர் (பொறுப்பு), 19வது வார்டு, சூரமங்கலம் மண்டலம், சேலம் மாநகராட்சி.
6.	திரு.ந.ஸ்டாலின் (வயது 52/2026), த/பெ.(லேட்)நடேசன், தூய்மைப்பணி மேற்பார்வையாளர் / வருவாய் உதவியாளர் (பொறுப்பு), வார்டு 27, சூரமங்கலம் மண்டலம், சேலம் மாநகராட்சி.
7.	செல்வி.ஜெகதீஸ்வரி (வயது 30/2026), த/பெ.பெரியசாமி, தேர்தல் பிரிவு, Data Entry Operator, சூரமங்கலம் மண்டல அலுவலகம், சேலம் மாநகராட்சி.
8.	திரு.அ.கேசவன் (வயது 29/2026), த/பெ.அசோக்குமார், கதவு எண்.15/ஏ, பாண்டுநகர், மணியனூர் அஞ்சல், அன்னதானப்பட்டி, சேலம்

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SALEM-7.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.16/AC/2026 u/s 7, 12 r/w 7 and 13(2) r/w 13(1)(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 24.10.2026-ம் தேதி மாலை சுமார் 16.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.நல்லம்மாள் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின், துணை ஆய்வுக்குழு அலுவலர், திரு. K.சித்ரா அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் K.சித்ரா, துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம். பெறுதல் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். ஐயா, சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டல அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தங்களது பதவியை தவறாகப் பயன்படுத்தி அங்குள்ள தனிநபர் புரோக்கர்கள் மூலம் சூரமங்கலம் மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் புதிய சொத்துவரி மதிப்பீடு மற்றும் வரி மாற்றங்கள், சொத்துவரி பெயர் மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள், நிலுவை வரி மற்றும் வரி மதிப்பீடு, தொழில் வரி, புதிய வணிக உரிமம் போன்ற பணிகளுக்காக பொது மக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு வசூலிப்பதாக 23.10.2026 ஆம் தேதி பகல் சுமார் 13.00 மணிக்கு கிடைத்த நம்பகமான தகவலின்பேரில் 23.10.2026ம் தேதி பகல் 15.30 மணி முதல் 24.10.2026 ஆம் தேதி காலை 08.00 மணி வரை நானும், திரு. M.சுரேஷ், வருவாய் ஆய்வாளர், அழகாபுரம், சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களும் மற்றும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களும் இணைந்து சேலம் மாநகரம் லீ பஜார் ரோட்டில் இயங்கி வரும் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டல அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது அவ்வலுவலகத்தில் இருந்த சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம், கோட்டம் எண் 8-ல் வருவாய் உதவியாளராக பணிபுரியும் திரு.M.ஞானகுரு அவர்களின் அலைபேசி எண்.98420 76746-உடன் இணைக்கப்பட்டுள்ள GPay கணக்கின் UPI ID No. gurum6980@okhdfcbank ஐ ஆய்வு செய்ததில், 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலகட்டத்தில் பல்வேறு நபர்களிடமிருந்து ரூ.5,37,066/- வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் அவருடன்

அவ்வலுவலகத்தில் இருந்த அவரது தம்பி திரு.M.கோபாலகிருஷ்ணன் அவர்களை சோதனை செய்ததில் அவரிடம் இருந்து கணக்கில் வராத பணம் ரூ.15,000/- (500 X 30 =15000/-) கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.M.கோபாலகிருஷ்ணன் அவர்களின் கைப்பேசி எண் 9944772767-உடன் இணைக்கப்பட்டிருந்த GPay கணக்கின் UPI ID krishnan2010mphil@oksbi பரிவர்த்தனையை ஆய்வு செய்ததில் 2026-ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலகட்டத்தில் அவரது GPay கணக்கில் ரூ.17,78,918/- தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையில், அவரது அண்ணன் திரு.ஞானகுரு என்பவருக்கு மட்டும் ரூ.93,558/- அனுப்பப்பட்டிருந்தது. அந்த தொகை பற்றி விசாரிக்க, அந்தத் தொகையானது, தனது அண்ணன் சேலம் மாநகராட்சியில் வரி வசூலராகப் பணிபுரிந்து வருவதால், அவருக்கு உதவியாகத் தான் வரி வசூல் செய்யும் பணியில் ஈடுபட்டு, அதன் மூலம் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த வரித் தொகைகளை GPay மூலம் பெற்று, பின்னர் அந்தத் தொகைகளைத் தனது அண்ணனின் GPay கணக்கிற்கு மீண்டும் அனுப்பி வைத்ததன் காரணமாக ஏற்பட்ட பணப் பரிவர்த்தனைகள் என்றும் விளக்கமளித்தார். பொதுமக்களிடமிருந்து GPay மூலம் வரி வசூல் செய்யும்போது, சில நேரங்களில் அவர்கள் செலுத்த வேண்டிய வரித் தொகையைவிடக் கூடுதலான தொகையை அனுப்பி வைப்பார்கள் என்றும், அவ்வாறு கூடுதலாகப் பெறப்படும் தொகையை அவ்வப்போது தனது அண்ணன் திரு.ஞானகுரு என்பவரின் GPay கணக்கிற்கு அனுப்பி விடுவதாகவும் தெரிவித்தார். தனது அண்ணனுக்கு உதவி செய்து வந்ததற்காக, அவர் அவ்வப்போது தனது செலவுகளுக்காகப் பணம் கொடுப்பார் என்றும் தெரிவித்தார். எனவே திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.15,000/- மற்றும் அவரது GPay பரிவர்த்தனை மூலம் அவரது அண்ணன் திரு.ஞானகுரு அவர்களுக்கு அனுப்பப்பட்ட ரூ.93,558/- ஆகியவை பொதுமக்களிடமிருந்து வரிவசூல் என்ற வகையில் பொது ஊழியரான திரு.ஞானகுரு, அவரது தம்பியும் தனியருமான திரு.கோபாலகிருஷ்ணன் என்பவர் மூலம் கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருப்பதாகான போதுமான முகாந்திரம் உள்ளது. மேலும் திடீர் தணிக்கையின் போது அலுவலகத்திற்கு வந்திருந்த சூரமங்கலம் மண்டலம், வார்டு 27-ல் வரிவசூல் பணியை மேற்கொள்ளும் தூய்மைப்பணி மேற்பார்வையாளர்/வருவாய் உதவியாளர் (பொறுப்பு), திரு.ஸ்டாலின் அவர்களை தணிக்கை செய்து அவரிடம் இருந்து கைபேசி எண்.9443516546-ன் UPI

ID:stalinnatesan1014-1@okaxis-ஐ ஆய்வு செய்ததில் டிசம்பர்-2024 மற்றும் ஜனவரி-2026 முதல் அக்டோபர்-2026 வரையில் அவரது GPay கணக்கில் ரூ.6,91,551/- தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டிசம்பர் 2024-ல் மட்டும் ரூ.4,52,500/- அவருடைய வங்கி கணக்கிற்கு Gpay மூலம் வரப்பெற்றுள்ளது. அந்த தொகைகள் என்ன பரிவர்த்தனை என்று தனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை என்று தெரிவித்தார். மேலும், அவர் தனக்கு உதவியாக வேலை செய்ய கோவிந்தராஜ் என்ற தனிநபர் ஒருவரை பணி அமர்த்தி இருப்பதாகவும், அதற்காக அவருக்கு ஒருநாளைக்கு சம்பளமாக ரூ.200/- ஐ தனது சம்பளத்தில் இருந்து கொடுத்து வருவதாக தெரிவித்தார். எனவே மேற்படி தொகையானது வரிவசூல் என்ற வகையில் Gpay மூலம் வருவாய் உதவியாளர் (பொறுப்பு) அலுவலராக பணிபுரியும் பொது ஊழியரான திரு.ஸ்டாலின், பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருப்பதாகான போதுமான முகாந்திரம் உள்ளது. மேலும் தணிக்கையின் போது அலுவலகத்திற்கு வந்திருந்த சூரமங்கலம் மண்டலம், வார்டு 19-ல் வரிவசூல் பணியை மேற்கொள்ளும் செயல் திறனற்ற பணியாளர் /வருவாய் உதவியாளர் (பொறுப்பு), திரு.வாசுதேவன் அவர்களை தணிக்கை செய்து அவரிடம் இருந்து கைபேசி எண்.9942373782, UPI ID:kashdhurikashdhuri79437-1@okhdfcbank-ஐ ஆய்வு செய்ததில் ஜனவரி-2026 முதல் ஆகஸ்ட்-2026 வரை அவரது GPay கணக்கில் ரூ.2,01,694/- தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது. அவருடைய GPay அவரது கனராவங்கி கணக்கு எண்.01225101040000 உடன் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் மேற்படி தொகைகள் அவரது வங்கிகணக்கில் பெறப்பட்டதற்கு தற்பொழுது தன்னால் சரியான விளக்கம் கொடுக்க இயலவில்லை என்று தெரிவித்தார். திரு.வாசுதேவன் அவர்கள் அவரது வேலைக்கு உதவியாக தனிநபர் திரு.சஞ்சீவ் என்பரையும் நியமித்து வைத்துள்ளதாகவும் அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் சம்பளம் கொடுத்து வருவதாக தெரிவித்தார். எனவே மேற்படி தொகையானது வரிவசூல் என்ற வகையில் Gpay மூலம் வருவாய் உதவியாளர் (பொறுப்பு) அலுவலராக பணிபுரியும் பொது ஊழியரான திருவாசுதேவன், பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருப்பதாகான போதுமான முகாந்திரம் உள்ளது. மேலும் தணிக்கையின்போது அலுவலகத்தில் இருந்த திரு.அ.கேசவன் (வயது 29/2026), த/பெ.அசோக்குமார், கதவு எண்.15/ஏ, பாண்டுநகர், மணியனூர் அஞ்சல், அன்னதானப்பட்டி, சேலம் என்பவரை விசாரிக்க அவர் 2022 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை சேலம் சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் வார்டு 23-ல் வரிவசூல்

செய்யும் பணியில் வருவாய் உதவியாளர்களுக்கு உதவியாக இருந்து வருவதாகவும் தற்சமயம் திரு.கோகுல், என்ற பில்கலெக்கடருக்கு உதவியாளராக இருந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரது செல்போன் எண்.7708801418 உடன் இணைந்த UPI ID kesavanhari123@oksbi என்ற GPAY தரவுகளை ஆய்வு செய்தபோது அவருடைய KVB Bank, குகை கிளையின் சேமிப்பு கணக்கு எண்.1653194000008290 என்ற வங்கி கணக்கில் இணைந்துள்ளது என்றும், அந்த UPI ID மூலம் கடந்த 01.01.2026 முதல் தற்போது வரை வரவு மட்டும் மொத்தம் ரூபாய் 27,35,128/- தொகை வரப்பெற்றுள்ளது. மேலும், திரு.கேசவன் அவர்களிடம் மேற்படி பரிவர்த்தனைகள் குறித்து விசாரித்தபோது, திரு.கோகுல் அவர்கள் கூறியதன்பேரில் பொதுமக்களிடமிருந்து வரி வசூல் செய்யும் பணத்தை Gpay-மூலம் பெற்றதாகவும், அந்த தொகையை மேற்படி அலுவலகத்தில் Data Entry Operator ஆக பணிபுரியும் செல்வி.ஜெகதீஸ்வரி அவர்களின் KVB Bank, பஞ்சுகாளிப்பட்டி கிளையின் சேமிப்பு கணக்கு எண்.1885166000002360 என்ற வங்கி கணக்கில் இணைந்துள்ள Gpay-விற்கு அனுப்பப்பட்டு, அந்த கணக்கிற்கான ஜெகதீஸ்வரி அவர்களுடைய பெயரிலான ஏ.டி.எம்-ஐ தான் பயன்படுத்தி பணத்தை எடுத்து இவ்வலுவலக காசாளரிடம் கொடுத்துவிடுவதாக தெரிவித்தார். அலுவலகத்தில் இருந்த செல்வி. செல்வி.ஜெகதீஸ்வரி அவர்களின் வங்கி பரிவர்த்தனை விபரங்களை ஆய்வு செய்ததில், அவர் பெயரிலான மேற்படி வங்கி ஏ.டி.எம்-லிருந்து 01.01.2026 முதல் 23.10.2026 வரை ரூபாய்.4,26,000/- பணத்தை Withdraw செய்யப்பட்டுள்ளது. அந்த தொகை மண்டல காசாளரிடம் கொடுத்து வரியாக செலுத்தியுள்ளதாக திரு.கேசவன் தெரிவித்தார். அவரது Gpay-மூலம் பெற்ற தொகையில் மீதமுள்ள தொகை ரூ.23,09,128/-ல் கடந்த ஜனவரி-2026 முதல் ஆகஸ்ட்-2026 வரை பணிபுரிந்த வருவாய் உதவியாளர் திரு.சரவணன் அவர்களிடமும், அதை தொடர்ந்து ஆகஸ்ட் 2026 முதல் தற்போதுவரை பணிபுரியும் வருவாய் உதவியாளர் திரு.கோகுல் அவர்களிடமும் பணமாக ஏடிஎம்-ல் இருந்து எடுத்து கொடுத்துவிட்டதாகவும், அதை தவிர்த்து தன்னிடம் வேறு வார்டிலுள்ள வேறு வருவாய் உதவியாளர்கள் திரு.உமாசங்கர், திரு.குரு, திரு.கோபால் ஆகியோர்களும் அவர்கள் வசூல் செய்யும் பணத்தை தன்னுடைய வங்கி கணக்கில் செலுத்துவார்கள் எனவும், அவர்கள் எப்போது தன்னிடம் பணம் கேட்கிறார்களோ அப்போது தான் ஏடிஎம்-யில் இருந்து எடுத்து அவர்களிடமே தான் கொடுத்துவிடுவதாகவும் தெரிவித்தார். எனவே தனியரான திரு.கேசவன் மற்றும் Data Entry Operator ஆக பணிபுரியும்

செல்வி.ஜெகதீஸ்வரி ஆகியோர் வரிவசூல் என்ற வகையில் பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பணம் அரசு ஊழியர்களான வருவாய் உதவியாளர்களுக்கு வழங்கி, அரசு ஊழியர்கள் கையூட்டாக பணம் பெற அவர்களுக்கு உடந்தையாக செயல்பட்டிருப்பதற்கான போதுமான முகாந்திரம் உள்ளது. மேலும், இந்த திடீர் தணிக்கையின்போது இவ்வலுவலகத்தில் கணினி வரி வசூல் மையத்தில் பணிபுரியும் காசாளர் திருமதி.சித்ரா அவர்களிடம் அதுவரை போடப்பட்ட பில்களுக்கான தொகைகளை சரிபார்த்தபோது, அந்த சமயத்தில் பில் எண் 049/02/02/26-27/0003810 முதல் 3815 வரையிலான 06 பில்கள் மூலம் ரூ.31,548/-ல் கையிருப்பில் ரூ.21,548/- மட்டும் இருந்தது. பில் தொகையை விட குறைவாக இருந்த ரூ.10,000/- குறித்து கேட்டபோது அந்த தொகையை அன்றைய தினம் சுமார் 12.30 மணியளவில் வருவாய் ஆய்வாளர் திரு.வீரகுமார் அவர்கள் அவசரமாக தேவைப்படுவதாக சொல்லி தன்னிடமிருந்து பெற்றுச்சென்றதாக தெரிவித்தார். திரு.வீரகுமார் அவர்களை விசாரித்தபோது அவரும் அந்த பணத்தை அவர் கண் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்வதற்காக பெற்றுச்சென்றதாகவும், சொல்லி அந்த பணத்தை ஆஜர் படுத்தினார். அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகையை வருவாய் ஆய்வாளர் திரு.வீரகுமார் தனிப்பட்ட தேவைக்காக பெற்றுச்சென்றுள்ளார், மேலும் அவருக்கு உடந்தையாக காசாளர் திருமதி.சித்ரா அவர்களும் அவரது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்த அரசு பணத்தை எடுத்து அவரது உயர் அலுவலரான திரு.வீரகுமார் அவர்களின் தனிப்பட்ட தேவைக்கு கொடுத்து அரசு பணத்தை கையாடல் செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

இத்துடன், திடீர் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட தொகை ரூ.15,000/- (30x500), மற்றும் கீழ்கண்ட ஆவணங்களையும், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களையும் இணைத்துள்ளேன்.

1.	சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டல அலுவலகத்தில் வைத்து 23.10.2026-ம் தேதி பிற்பகல் 15.30 மணி முதல் 24.10.2026-ம் தேதி காலை 08.00 மணி வரை, சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர், திருமதி.சித்ரா அவர்களால் தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள்.
2.	திரு.ஞானகுரு (வயது 44/2026) த/பெ.மாதையன், வரி வசூலர், கோட்டம்-8, அஸ்தம்பட்டி மண்டலம், சேலம் மாநகராட்சி. இருப்பிட முகவரி: கதவு எண் 41, பாவேந்தர் தெரு, அரிசிபாளையம், சேலம் - 636009 என்பவரின் வாக்குமூலம். நாள்: 23.10.2026.

3.	திரு.M.கோபாலகிருஷ்ணன் (வயது 38/2026) த/பெ.மாதையன், க.எண்.117/41, பாவேந்தர் தெரு, அரிசிபாளையம், சேலம் - 636009 என்பவரின் வாக்குமூலம். நாள்: 23.10.2026.
4.	திரு.P.மாதேஸ்வரன் (வயது 56/2026), த/பெ பெருமாள், செயல் திறனற்ற பணியாளர், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டல அலுவலகம், சேலம்., வீட்டு முகவரி: கதவு எண்.226, பழைய சூரமங்கலம், நாகாத்தம்மன் கோவில் தெரு, சேலம்-5 என்பவரின் வாக்குமூலம். நாள்: 23.10.2026.
5.	திருமதி.R.சித்ரா (வயது 59/2026), க/பெ அசோகன், காசாளர், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டல அலுவலகம், சேலம், வீட்டு முகவரி: கதவு எண்.10B, பிள்ளையார் நகர், கோர்ட் ரோடு, சேலம்-7 என்பவரின் வாக்குமூலம். நாள்: 23.10.2026.
6.	திருமதி.S.விஜயா (வயது 39/2026), க/பெ சரவணன், கதவு எண்.5/121, சி.பெரியபுதூர், ஓடச்சக்கரை, சேலம்-16, என்பவரின் வாக்குமூலம். நாள்: 23.10.2026.
7.	திரு.K.வீரகுமார் (வயது 54/2026), த/பெ கந்தசாமி, வருவாய் ஆய்வாளர் (சிறப்பு), சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டல அலுவலகம், சேலம்., வீட்டு முகவரி: கதவு எண்.322, சன்னியாசி குண்டு, திருமலை நகர், சேலம்., என்பவரின் வாக்குமூலம். நாள்: 23.10.2026.
8.	திரு.ரா.வாசுதேவன் (வயது 55/2026), த/பெ.ராமசாமி, செயல்திறனற்ற பணியாளர் / வருவாய் உதவியாளர் (பொறுப்பு), 19வது வார்டு, சூரமங்கலம் மண்டலம், சேலம் மாநகராட்சி. வீட்டு முகவரி: கதவு எண்.124, புதுக்காலனி, சிங்கிபுரம், வாழப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் என்பவது வாக்குமூலம். நாள்:23.10.2026
9.	திரு.ந.ஸ்டாலின் (வயது 52/2026), த/பெ.(லேட்)நடேசன், தூய்மைப்பணி மேற்பார்வையாளர் / வருவாய் உதவியாளர் (பொறுப்பு), வார்டு 27, சூரமங்கலம் மண்டலம், சேலம் மாநகராட்சி. வீட்டு முகவரி: கதவு எண்.12, குருக்கல் காலனி, சின்னத்திருப்பதி, சேலம்-8 என்பவரது வாக்குமூலம், நாள்:23.10.2026.
10.	செல்வி.ஜெகதீஸ்வரி (வயது 30/2026), த/பெ.பெரியசாமி, தேர்தல் பிரிவு, Data Entry Operator, சூரமங்கலம் மண்டல அலுவலகம், சேலம் மாநகராட்சி, இருப்பிட முகவரி: கதவு எண்.33-3-ஏ, அவ்வைநகர், ஜாகீர்அம்மாபாளையம், சேலம்-636302 என்பவரின் வாக்குமூலம் நாள்.23.10.2026.
11.	திரு.அ.கேசவன் (வயது 29/2026), த/பெ.அசோக்குமார், கதவு எண்.15/ஏ, பாண்டுநகர், மணியனூர் அஞ்சல், அன்னதானப்பட்டி, சேலம் என்பவரின் வாக்குமூலம் நாள்.23.10.2026.
12.	9944772767-உடன் இணைக்கப்பட்டிருந்த GPay கணக்கின் UPI ID

	krishnan2010mphil@oksbi மூலம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலகட்டத்தில் நடைபெற்ற பணப் பரிவர்த்தனைகளின் Screen Shot பிரின்ட் எடுக்கப்பட்டதின் சான்றொப்பமிட்ட நகல்கள். (திரு.கோபாலகிருஷ்ணன் என்பவருக்கானது)
13.	9443516546-உடன் இணைக்கப்பட்டிருந்த GPay கணக்கின் UPI ID:stalinnatesan1014-1@okaxis மூலம் டிசம்பர்-2024 மற்றும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலகட்டத்தில் நடைபெற்ற பணப் பரிவர்த்தனைகளின் Screen Shot பிரின்ட் எடுக்கப்பட்டதின் சான்றொப்பமிட்ட நகல்கள். (திரு.ஸ்டாலின் என்பவருக்கானது)
14.	9942373782-உடன் இணைக்கப்பட்டிருந்த GPay கணக்கின் UPI ID:kashdhurikashdhuri79437-1@okhdfcbank- மூலம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலகட்டத்தில் நடைபெற்ற பணப் பரிவர்த்தனைகளின் Screen Shot பிரின்ட் எடுக்கப்பட்டதின் சான்றொப்பமிட்ட நகல்கள். (திரு.வாசுதேவன் என்பவருக்கானது)
15.	7708801418-உடன் இணைக்கப்பட்டிருந்த GPay கணக்கின் UPI ID:kesavanhari123@oksbi என்ற GPay மூலம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலரன காலகட்டத்தில் நடைபெற்ற பணப் பரிவர்த்தனைகளின் Screen Shot பிரின்ட் எடுக்கப்பட்டதின் சான்றொப்பமிட்ட நகல்கள். (திரு.கேசவன் என்பவருக்கானது)
16.	செல்வி.ஜெகதீஸ்வரி அவர்களின் பெயரிலான KVB Bank சேமிப்பு கணக்கு எண்.1885166000002360-ன் 01.10.2026 முதல் 23.10.2026 வரைக்கான பண பரிவர்த்தனை விபரங்களின் சான்றொப்பமிட்ட நகல்
17.	23.10.2026 ஆம் தேதியின் வரிவசூல் குறித்த விபரம் ஆன்லைனில் பிரிண்ட் எடுத்து சான்றொப்பமிட்ட நகல். (Remitance by Matheswaran)
18.	23.10.2026 ஆம் தேதியின் வரிவசூல் குறித்த விபரம் கொண்ட கணினி திரையினை போட்டோ எடுத்து பிரின்ட் எடுக்கப்பட்டு சான்றொப்பமிடப்பட்டது. (R.Chitra Profile)
19.	திரு.ராமு த/பெ ஏழுமலை கவுண்டர், 345/3, சூரமங்கலம் ரோடு, தெற்கு தெரு என்ற பெயரில் 23.10.2026 ஆம் தேதி 01:01:58 PM மணிக்கு போடப்பட்ட ரூ.52,592/- க்கான பில் எண்.0069468-ன் சான்றொப்பமிட்ட நகல்.
20.	சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலக அகப்பணியாளர்களின் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வருகைப்பதிவேடு பக்கம் 01 முதல் 06 வரை சான்றொப்பமிட்ட நகல்.

21.	சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம் வருவாய் பிரிவு 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வருகைப்பதிவேடு பக்கம் 01 முதல் 06 வரை சான்றொப்பமிட்ட நகல்.
22.	சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம் பொறியாளர் பிரிவு 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வருகைப்பதிவேடு பக்கம் 01 முதல் 08 வரை சான்றொப்பமிட்ட நகல்.
23.	சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம் பொது சுகாதாரப் பிரிவு 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வருகைப்பதிவேடு பக்கம் 01 முதல் 08 வரை சான்றொப்பமிட்ட நகல்.
24.	சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம் செயல் திறனற்ற பணியாளர் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வருகைப்பதிவேடு பக்கம் 01 முதல் 10 வரை சான்றொப்பமிட்ட நகல்.
25.	சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் பணிமாற்று அடிப்படை 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வருகைப்பதிவேடு பக்கம் 01 முதல் 08 வரை சான்றொப்பமிட்ட நகல்.
26.	சூரமங்கலம் மண்டல அலுவலகம் - I நடமாடும் பதிவேடு (2025, 2026) பக்கம் 01 முதல் 04 வரை சான்றொப்பமிட்ட நகல்.
27.	கொடிநாள் 2025 இலக்கு தொடர்பாக சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.சி6/977/2026 நாள்:30.07.2026 மற்றும் கொடிநாள் நிதி வசூல் செய்த பதிவேட்டின் விவரப் பட்டியல் பக்கம் 01 முதல் 08 வரை சான்றொப்பமிட்ட நகல்.

எனவே, மேற்படி கைப்பற்றப்பட்ட தொகை ரூ.15,000/-, அரசு கணக்கில் ரூ.10,000/- கையாடல் செய்தமை மற்றும் Gpay பரிவர்த்தனைகள் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட தொகைக்கு பொறுப்பானவர்களான 1) திரு.M.ஞானகுரு, வருவாய் உதவியாளர், அஸ்தம்பட்டி மண்டலம், 2) திரு.M.கோபாலகிருஷ்ணன் (தனி நபர்) 3) திரு.K.வீரகுமார், வருவாய் ஆய்வாளர் (சிறப்பு), சூரமங்கலம் மண்டல அலுவலகம், 4) திருமதி.R.சித்ரா, காசாளர், சூரமங்கலம் மண்டல அலுவலகம் 5) திரு.ரா.வாசுதேவன், வருவாய் உதவியாளர் (பொறுப்பு), சூரமங்கலம் மண்டல அலுவலகம் 6) திரு.ந.ஸ்டாலின், வருவாய் உதவியாளர் (பொறுப்பு), சூரமங்கலம் மண்டல அலுவலகம் 7) செல்வி.ஜெகதீஸ்வரி, (Data Entry Operator), சூரமங்கலம் மண்டல அலுவலகம் 8) திரு.அ.கேசவன், (தனி நபர்) ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/-xxxxxx (K.சித்ரா) 24/10/26) Madam, Received the above

computer typed complaint on 24.10.2026 at about 16.00 hrs. and registered a case in Salem Vigilance & Anti-Corruption Cr.No.16/AC/2026 u/s 7, 12 r/w 7 and 13(2) r/w 13(1) (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 24.10.2026 at 16.30 hrs. after obtaining oral concurrence from DVAC. Sd xxxx (M.Nallammal) 24/10/2026, Inspector of Police, V&AC, Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் மாவட்ட சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான மாவட்ட சிறப்பு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

(M.நல்லம்மாள்) 24/10/2026
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.